


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கண்தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை, வெட்டூர்ணிமடம், பெஜான்சிங் கண் மருத்துவமனையில் இன்று (08.09.2016) கொடியசைத்து, தொடங்கி வைத்தார். பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவர் மரு. எஸ்.எம்.பெஜான்சிங், மரு. ருஸிதா பெஜான்சிங் ஆகியோர் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 610/2016 நாள்: 08.09.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வெட்டுர்ணிமடம், பெஜான்சிங் கண் மருத்துவமனையில் கண்தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை, இன்று (08.09.2016) கொடியசைத்து தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், கண்தானம் குறித்த விழிப்புணர்வு பேரணியை, வெட்டுர்ணிமடம், பெஜான்சிங் கண் மருத்துவமனையில் இன்று (08.09.2016)கொடியசைத்து தொடங்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார். இப்பேரணியானது வெட்டுர்ணிமடம் பெஜான்சிங் கண் மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு, கிறிஸ்துநகர், பால்பண்ணை சந்திப்பு, ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி, பார்வதிபுரம் வழியாக மீண்டும் பெஜான்சிங் கண் மருத்துவமனையில் சென்று நிறைவடைந்தது. இப்பேரணியில் சுமார் 200-க்கும் மேற்பட்ட பெஜான்சிங் கண் மருத்துவமனை கல்லூரி மாணவ, மாணவியர்கள், மருத்துவர்கள் கண்தானம் குறித்து, பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், "கண்தானம் செய்திடுவோம், காலமெல்லாம் வாழ்ந்திடுவோம்" "இருக்கும்வரை இரத்த தானம் இறந்தபின் கண் தானம்" என்ற பல்வேறு விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவர் மரு. எஸ்.எம்.பெஜான்சிங், மரு. ருஸிதா பெஜான்சிங், மரு. தீபா, மரு. பொன்குமாரி, மரு. மதன்குமார், மரு. கிஷோர், மரு. சஞ்சன் பெஜான்சிங், மரு. நிரஞ்சனா பெஜான்சிங், மரு. ஜெபிந்த் பிரயென், மரு.பிரெயின் சக்கரவர்த்தி, மரு. உமா மகேஸ்வரி, மரு. ரபெய்கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.